# பரீட்சகரின் அறிக்கை

## AA3 பரீட்சை – 2020 சனவரி

## (AA34) செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு

(AA34) செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு என்னும் வினாத்தாள் பாடப்புத்தகத்தை (கோட்பாடுகள் மற்றும் அதன் பிரயோகங்கள்) அடிப்படையாகக் கொண்ட ஒன்பது (9) கட்டாய வினாக்களை உள்ளடக்கியதாகும். இங்கு மூன்று பகுதிகள் காணப்படுகின்றன. அவையாவன, ஒவ்வொன்றும் ஐந்து (5) புள்ளிகளைக் கொண்ட நான்கு (4) கட்டாய வினாக்களைக் உள்ளடக்கிய **பகுதி (A)**, ஒவ்வொன்றும் பத்து (10) புள்ளிகளைக் கொண்ட மூன்று (3) கட்டாய வினாக்களை உள்ளடக்கிய **பகுதி (B)** மற்றும் ஒவ்வொன்றும் 25 புள்ளிகளைக் கொண்ட இரண்டு (2) கட்டாய வினாக்களை உள்ளடக்கிய **பகுதி (c)** என்பனவாகும்.

முழுமையான வினாப்பத்திரமும் பாடப்புத்தகத்தினை (கோட்பாடுகள் மற்றும் அதன் பிரயோகங்கள்) அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் விசேடமாக இறுதி இரண்டு வினாக்களிலும் பரீட்சார்த்திகளின் கோட்பாட்டு ரீதியான அறிவும் அவற்றைப் பிரயோகிப்பது பற்றிய அறிவும் பரீட்சிக்கப்பட்டிருந்தன. பரீட்சார்த்திகள் பாடப்புத்தகத்தைக் கற்று, கடந்த கால வினாப்பத்திரங்களையும் செய்து பார்த்திருப்பின், இவ்வினாப்பத்திரத்திற்கு இலகுவாக 50 இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருக்க முடியும். அதிகளவான பரீட்சார்த்திகள் பாட அறிவைக் கொண்டிருந்த போதிலும், அவர்கள் பாட விடயத்தை அடிப்படையாகக் கொண்டு வினாத்தாளில் தரப்பட்ட வினாக்கள் தொடர்பில் விடைகள் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்பது பற்றிய பயிற்சியினைக் கொண்டிருக்கவில்லை.

இவ்வினாத்தாளுக்கான பரீட்சார்த்திகளின் ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்ததுடன் வினாத்தாளுக்காக ஒதுக்கப்பட்ட நேரத்தை சரியாக முகாமித்ததன் மூலம் சகல வினாக்களுக்கும் முறையாக விடையளித்து உயர் புள்ளிகளைப் பெற்றிருந்த பரீட்சார்த்திகள் காணப்பட்டனர்.

பெரும்பாலான பரீட்சார்த்திகள், இவ்வினாத்தாளின் சகல வினாக்களுக்கும் விடையளிக்க முயற்சித்திருந்ததுடன் விடையளித்துமிருந்தனர். எவ்வாறாயினும், வினாக்களின் சில பகுதிகளுக்கு விடையளிக்கப்படாமலுமிருந்தன. அவ்வாறு வினாக்கள் விடையளிக்கப்படாமைக்கு மோசமான நேர முகாமைத்துவம், அறிவு குறைவாக இருந்தமை, வினாத்தாளிலுள்ள வினாக்களை விளங்கிக்கொள்ளாமை போன்றவை பிரதானமான காரணங்களாக இருக்கலாம்.

இவற்றிற்குப் புறம்பாக, புள்ளியிடும் செயன்முறையின்போது அவதானிக்கப்பட்ட பொதுவான வழுக்கள் பின்வருமாறு:

- பகுப்பாய்வுத் திறன்கள் மற்றும் பிரயோக அறிவுக் குறைபாடு
- நேர்த்தியற்ற கையெழுத்து
- உயர் புள்ளிகள் வழங்கப்பட்டிருந்த வினாக்களுக்கு குறுகிய விடைகள் எழுதப்பட்டிருந்தமை
- குறைந்த புள்ளிகள் வழங்கப்பட்ட வினாக்களுக்கு நீண்ட விடைகள் எழுதப்பட்டிருந்தமை
- தரப்பட்ட விடயங்களில் பிரச்சினைகள் இனங்காணப்பட்டிருப்பினும், வினாக்களுக்கு ஏற்றாற்போல் விடைகள் வழங்கப்படாமை
- விடைகளைத் திட்டமிடாமை, இதன் விளைவாக சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தமை
- விடையளிக்கும்போது வினாத்தாளின் இறுதியில் தரப்பட்டவாறு ''வினைச் சொல்'' பற்றிக் கவனம் செலுத்தாமை.
- வினாக்களிலிருந்து பரீட்சகர் என்ன எதிர்பார்க்கிறார் என்பதை விளங்கிக்கொள்ளாமை.

## பகுதி A

நான்கு (04) கட்டாய வினாக்கள்

**வினா இல. 01**

இவ்வினா வியாபார அமைப்புகளின் வகைகள் மற்றும் வியாபாரச் சூழல் தொடர்பான அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவில் தேவைப்படுத்தப்பட்டதை விளங்கிக்கொண்டு முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

இவ்வினாவின் **பகுதி (a)** இல், இரண்டு பட்டதாரி நண்பர்களால் ஆரம்பிக்கப்படக்கூடிய வியாபார அமைப்புக்களின் வகைகள் கேட்கப்பட்டன. எவ்வாறாயினும், மிகச் சில பரீட்சார்த்திகள் தங்களது விடையாக தனியுடமை வியாபாரம் எனக் குறிப்பிட்டிருந்தனர். அத்தகைய அமைப்பானது நண்பர்களால் ஆரம்பிக்கக்கூடிய வியாபாரத்திற்குப் பொருத்தமானதல்ல என்ற உண்மையை அந்தப் பரீட்சார்த்திகள் விளங்கிக்கொள்ளவில்லை என்பதையே இது காட்டுகிறது.

**பகுதி (b)** இல், வியாபாரத்தைப் பாதிக்கின்ற பொருளாதாரக் காரணிகளைக் குறிப்பிடுமாறு கோரப்பட்டது. எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் அரசியல், சட்டம், சமூகம் மற்றும் சூழற் காரணிகளை வியாபாரத்தைப் பாதிக்கின்ற பொருளாதாரக் காரணிகளெனக் குறிப்பிட்டிருந்தனர்.

பரீட்சார்த்திகள் இவ்வகையான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் பாடப்பரப்புகளில் அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்:

- வியாபார அமைப்புகளின் வகைகள்
- வியாபார அமைப்புகளின் பண்பியல்புகள் (உதாரணம்: நோக்கங்கள், அங்கத்தவர் எண்ணிக்கை போன்றவை)
- வியாபாரச் சூழலை அடையாளங்காணல் (அகச் சூழல், புறச் சூழல்)
- புறச் சூழற் சக்திகள் (பொருளாதார, சட்ட, தொழினுட்ப, சமூக)
- சூழற் சக்திக் காரணிகள் (உதாரணம்: பொருளாதாரச் சக்தி – பரிமாற்று வீதங்கள், வட்டி வீதங்கள், வரிவிதிப்பு)

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.***

**வினா இல. 02**

இவ்வினா, நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பில் அடிப்படைக் கோட்பாடொன்றாகக் கருதப்படுகின்ற தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு மீதான அறிவைப் பரீட்சித்திருந்தது. நிறுவனமானது தொடர்ந்தும் இயங்குவதற்கான அதனது ஆற்றலின்மீது குறிப்பிடத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் சான்றுக்காக கணக்காய்வு நெடுகிலும் கணக்காய்வாளர் தொடர்ந்தும் அவதானத்துடன் இருத்தல் வேண்டும். எனவே, நிறுவனம் தொடர்ந்தும் இயங்குவதற்கான அதன் ஆற்றல் மீது குறிப்பிடத்தக்களவு சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிதிசார்ந்ததும் தொழிற்பாடு சார்ந்ததுமான நிகழ்வுகளைத் தெளிவாக அடையாளங் காண்பதற்கு அவர்கள் இயலுமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அதிகளவான பரீட்சார்த்திகள் தொடர்ந்து இயங்குவதன் மீதான சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகளை விளங்கிக்கொண்டிருந்தனர். எவ்வாறாயினும், அவர்களால் நிதிசார்ந்த நிகழ்வுகளையும் தொழிற்பாடுசார்ந்த நிகழ்வுகளையும் தனித்தனியாக வேறுபடுத்துவதற்கு இயலாமற் போயிருந்ததுடன் அவர்களால், ஒதுக்கீடு செய்யப்பட்ட புள்ளிகளையும் பெற முடியவில்லை.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.***

**வினா இல. 03**

இவ்வினாவின் **பகுதி (a)** ஆனது சகல பொருண்மையான உறவுமுறைத் தரப்பினரின் ஊடுசெயல்களையும் கணக்காய்வாளர் கண்டுபிடிக்க எதிர்பார்க்க முடியாத சந்தர்ப்பங்கள் பற்றிக் கேட்கப்பட்டது. முழுப் புள்ளிகளையும் பெற்றுக் கொள்வதற்கு, மாணவர்கள் பின்வருவனவற்றில் அறிவினைக் கொண்டிருக்க வேண்டும்:

- உறவுமுறைத் தரப்பினர் என்றால் என்ன?
- உறவுமுறைத் தரப்பினரின் ஊடுசெயல்களுடன் தொடர்புடையதான முகாமையின் பொறுப்புடைமை
- உறவுமுறைத் தரப்பினரின் ஊடுசெயல்களுடன் தொடர்புடைய கணக்காய்வாளர்களின் பொறுப்புடைமை

சில பரீட்சார்த்திகளால் மாத்திரமே **பகுதி (a)** இற்கான முழுப் புள்ளிகளையும் பெற்றுக்கொள்ள முடிந்திருந்தது. இவ்வினா பாடப்புத்தகத்திலிருந்து நேரடியாகப் பரீட்சிக்கப்பட்டிருந்தபோதிலும் மேற்படி பாடப்பரப்புகளில் பெரும்பாலான பரீட்சார்த்திகள் போதியளவு அறிவினைக் கொண்டிருக்கவில்லை.

**பகுதி (b)** இல், வினாவில் குறிப்பிடப்பட்டதைத் தவிர, வேறு மூன்று கணக்காய்வு நடைமுறைகளைப் பட்டியலிடுமாறு கோரப்பட்டது. எவ்வாறாயினும், மாணவர்கள் அதே கணக்காய்வு நடைமுறைகளை மீளவும் எழுதியிருந்ததுடன் சிலர் தொடர்புடைய தரப்பினரின் ஊடுசெயல்களுக்கான சான்றுகளைப் பெற்றுக் கொள்வதுடன் தொடர்பற்ற பொதுவான கணக்காய்வு நடைமுறைகளைக் குறிப்பிட்டிருந்தனர்.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.***

**வினா இல. 04**

இவ்வினா நிறுவனமொன்றில் ஆற்றப்பட வேண்டிய தரக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் மற்றும் தனிநபர் கணக்காய்வு ஈடுபடுத்தல் மட்டம் ஆகியன பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. **பகுதி (a)** இன் கீழ், தனிநபர் கணக்காய்வு ஈடுபடுத்தல்களை மேற்கொள்ளும்போது மீளாய்வின்கீழ் உட்படுத்தப்படும் செயற்பாடுகள் பற்றிப் பரீட்சிக்கப்பட்டன. இங்கு கோட்பாட்டுரீதியான அறிவைக் கருத்திற்கொள்ளாமல் பின்வருவது போன்ற பொதுவான செயற்பாடுகளை பல பரீட்சார்த்திகள் எழுதியிருந்தமை அவதானிக்கப்பட்டது :

- வேலைத் தாள்களை மீளவும் பரிசோதித்தல்
- கணக்காய்வு அறிக்கைகளை மதிப்பீடு செய்தல்
- கணக்காய்வு நடைமுறைகளை மீளவும் ஆற்றுதல்
- நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்

**பகுதி (b)** இல், நிறுவன மட்டத்தில் பேணப்படும் தரக் கட்டுப்பாட்டு முறைமையின் மூலகங்கள் பரீட்சிக்கப்பட்டன. பல பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர்.

இது தரக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் மற்றும் அதன் மூலகங்கள் பற்றிய அறிவுக் குறைவினையே காட்டுகிறது.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.***

## <u>பகுதி B</u>

மூன்று (03) கட்டாய வினாக்கள்

### வினா இல. 05

பயனர்களின் நம்பிக்கையின் அளவை அதிகரிக்கின்ற ஒரு முடிவினை வெளிப்படுத்தும் பொருட்டு கணக்காய்வாளர் ஒருவர் பெற்றுக்கொள்ள வேண்டிய சான்றுகளின் தன்மை பற்றிய அறிவை இவ்வினா பரீட்சித்திருந்தது.

**பகுதி (a)** இல், போதுமான மற்றும் பொருத்தமான சான்று என்பதாற் கருதப்படுவது யாதென விபரிக்குமாறு கேட்கப்பட்டது.

போதுமானது என்பதன் கருத்து சான்றுகளின் போதுமானளவு பெரிய எண்ணிக்கையாகும். பொருத்தமானது என்பதன் கருத்து சான்றுகளின் நம்பகத்தன்மையும் தரமும் ஆகும். அதிகளவான பரீட்சார்த்திகள் திருப்திகரமான அளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர். ஆயினும் சில பரீட்சார்த்திகளால் சரியான கருத்தினை விபரிக்க முடியவில்லை.

வெற்றிகரமாக விடையளிக்காத பெரும்பாலான பரீட்சார்த்திகள் சம்பந்தமற்ற விடயங்களை எழுதியிருந்த துடன் அவர்களில் சிலர் வினாவில் தரப்பட்ட விபரங்களை மீள எழுதியிருந்தனர்.

**பகுதி (b)** இல், உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் தொடருவது தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவைப்பாடுகளை அடையாளங்காண்பதற்கான பரீட்சார்த்திகளின் ஆற்றல் பரீட்சிக்கப்பட்டது. பாடப்புத்தகத்தில் பல படிமுறைகள் விளக்கப்பட்டுள்ளதால் கணக்காய்வாளரால் ஆற்றப்படக்கூடிய பல படிமுறைகளை அதிகளவான பரீட்சார்த்திகள் குறிப்பிட்டிருந்தனர்.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.***

### வினா இல. 06

சாரா டிரேடிங் கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயத்தைப் பாதிக்கும் விடயங்களை மதிப்பிடுவதற்குப் பரீட்சார்த்திகள் தேவைப்படுத்தப்பட்டனர். சாரா டிரேடிங் ஆனது தனது அலுவலகக் கட்டிடத்திற்கு மூன்று மாதங்களுக்குத் தேய்மானஞ் செய்யவில்லை இதன் பெறுமதி ரூபா 01 மில்லியன் ஆகும். அத்துடன் அது 1.7 மில்லியன் என்ற பொருண்மை மட்டத்தை விஞ்சாது.

சாரா டிரேடிங் ஆனது நிருமாணம் பூர்த்தியடைந்ததன் பின்னர் ரூபா 1.5 மில்லியன் படுகடன் கிரயத்தை மூலதனமாக்கியிருந்தது. இது P & L இற்கு தாக்கல் செய்யப்பட வேண்டியதாகும். இந்தத் தொகையும் பொருண்மை மட்டத்தை விஞ்சாததாகும். எவ்வாறாயினும், இந்த இரண்டு பிறழ்பகர்வினையும் ஒருமித்துக் கருத்திற்கொள்ளும்போது, இது நிதிக் கூற்றுக்களுக்கு பொருண்மையானதாகும்.

எவ்வாறாயினும், ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே நிதிசார் அடிப்படையிலான இந்தத் தாக்கத்தை மதிப்பீடு செய்திருந்தனர். இது தமது தொழினுட்ப அறிவைப் பயன்படுத்தி நடைமுறைச் சந்தர்ப்பமொன்றில் சரியானதொரு முடிவினை எடுப்பதற்கான பரீட்சார்த்திகளின் ஆற்றலின் குறைபாட்டைக் காட்டுகிறது.

**பகுதி (b)** ஆனது, நேரடி வினாவாக இருந்ததுடன் அது கோட்பாட்டு ரீதியான அறிவைப் பரீட்சித்திருந்தது. இங்கு, கணக்காய்வாளரால் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்தப்பட வேண்டிய கணக்காய்வு அபிப்பிராயங்களின் வகைகளை ஏற்பிசைவு செய்யுமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டனர். எவ்வாறாயினும், கணக்காய்வாளரால் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில் தகைமைபெற்ற அபிப்பிராயம் (qualified opinion) வெளிப்படுத்தப்பட வேண்டும் எனச் சில பரீட்சார்த்திகள் குறிப்பிட்டிருந்தனர். ஆயினும், அவர்களில் பலர் அபிப்பிராயத்தின் மறுதலிப்பைப் பாதிக்கின்ற பொருண்மை மற்றும் பரவலானதன்மையைக் கருத்திற்கொள்ளவில்லை.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மோசமான மட்டத்தில் காணப்பட்டது.***

**வினா இல. 07**

இவ்வினாவின் **பகுதி (A)** ஆனது, தற்போதிருக்கின்ற கணக்காய்வாளர் ஒருவரை மாற்றும்போது கம்பனியினால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளையும் நியமனத்தை ஏற்றுக்கொண்டதன் பின்னர் புதிய கணக்காய் வாளரால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளையும் பரீட்சித்திருந்தது. இது பாடப்புத்தகத்திலிருந்து நேரடியாகக் கேட்கப்பட்ட வினாவாகும்.

கணக்காய்வாளர் ஒருவரின் நியமனம் மற்றும் மாற்றம் தொடர்பான நடைமுறைகள் பற்றிய அறிவு காணப்படாததால் **பகுதி (a)** மற்றும் **பகுதி (b)** ஆகிய இரண்டு பகுதிகளுக்குமான செயலாற்றுகை மோசமானதாகவே காணப்பட்டது. பல பரீட்சார்த்திகள் **பகுதி (a)** இற்காக பணிப்பாளர் சபையிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதல், பங்குதாரர்களுக்கு அறிவித்தல், கம்பனிகள் பதிவாளருக்கு அறிவித்தல் போன்ற சம்பந்தமற்ற பொதுவான விடைகளை எழுதியிருந்தனர்.

வினாவின் **பகுதி (B)** ஆனது கணக்காளர் இரகசியத் தகவல்களை வெளிப்படுத்தக்கூடாத சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் சரியான விடையினை அளித்திருந்தனர். எவ்வாறாயினும், பின்வருவன போன்ற சம்பந்தமற்ற விடைகளும் எழுதப்பட்டிருந்தன:

- நிதிக் கூற்றுக்களில் பொருண்மையான பிறழ்பகிர்வொன்றை கண்டுபிடிக்கும்போது
- கம்பனி தொடர்புடைய தரப்பினர் ஊடுசெயல்களில் ஈடுபடும்போது
- கம்பனியை ஏதாவது சேதங்கள் போன்றவற்றிலிருந்து பாதுகாப்பதற்கு

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மோசமான மட்டத்தில் காணப்பட்டது.***

## <u>பகுதி C</u>

இரண்டு (02) கட்டாய வினாக்கள்

**வினா இல. 08**

இவ்வினா விடய ஆய்வினை அடிப்படையாகக் கொண்ட வினாவாகும். இங்கு கூட்டுநிறுவன (கூட்டிணைவு) ஆளுமை, அகக் கட்டுப்பாடுகள், கட்டுப்பாட்டுச் சூழல் மற்றும் IT கட்டுப்பாடுகள் போன்றவற்றின் மீதான அறிவு பரீட்சிக்கப்பட்டது.

**<u>பகுதி (a), (b)</u>**

**பகுதி (a)** யும் **(b)** யும் கூட்டிணைவு ஆளுமை மற்றும் அதன் வழிகாட்டல்கள் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது.

**பகுதி (a)** ஆனது கூட்டிணைவு ஆளுமையின்படி பணிப்பாளர்களால் பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டல்கள் பற்றிப் பரீட்சித்திருந்தது. மிகச் சில பரீட்சார்த்திகளால் மாத்திரமே வழிகாட்டல்களைத் தெளிவாகக் குறிப்பிட முடிந்திருந்தது. வெற்றிகரமாக விடையளிக்காத அதிகளவான பரீட்சார்த்திகள் பின்வருவன போன்ற பணிப்பாளர்கள் மற்றும் கம்பனி முகாமையுடன் தொடர்புடைய ஏதாவது பணியைக் குறிப்பிட்டிருந்தனர்:

- நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு
- கொள்வனவு, விற்பனை மற்றும் இருப்புகளின் கட்டுப்பாடுகள்
- கடமைகளின் பாகுபாடு

**பகுதி (b)** ஆனது கூட்டிணைவு ஆளுமை வழிகாட்டல்களின்படி, தாபிக்கப்பட வேண்டிய குழுக்கள் தொடர்பான அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் ஆகக்குறைந்தது ஒரு குழுவையாவது குறிப்பிட்டிருந்தனர்.

மிகச் சொற்பளவிலான பரீட்சார்த்திகளே மோசடி ஒழிப்புக் குழு, கொள்வனவுக் குழு, விற்பனைக் குழு மற்றும் முகாமைத்துவக் குழு போன்ற சம்பந்தமற்ற விடைகளை வழங்கி, எவ்வித புள்ளிகளையும் பெற்றுக் கொள்ளவில்லை.

**பகுதி (c), (d)**

**பகுதிகள் (c), (d)** இற்கான செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது. வினாவானது கம்பனியின் பெறுகைச் செயன்முறை தொடர்பில் அதனால் பின்பற்றப்படுகின்ற எட்டு உறுதியான கட்டுப்பாடுகளைத் தெளிவாக முன்வைத்திருந்ததுடன், பரீட்சார்த்திகள் அவற்றில் ஐந்தினை மாத்திரம் அடையாளங்காண எதிர்பார்க்கப்பட்டது. பகுதி (d) இல், பரீட்சார்த்திகள் அத்தகைய நடைமுறைகளின் சம்பந்தப்பட்ட நோக்கத்தை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டனர். பெரும்பாலான பரீட்சார்த்திகளால் இப்பகுதிக்கு உயர் புள்ளிகளைப் பெறக் கூடியதாக இருந்தது. விடையுடன் சம்பந்தப்பட்ட பல விடயங்களை வினா தனக்குள்ளே உள்ளடக்கியிருந்தமை இதற்கான காரணமாக இருக்கலாம். அத்துடன் பரீட்சார்த்திகளால் தங்களது அடிப்படையான பாட அறிவைப் பயன்படுத்தி முழுப் புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்தது.

**பகுதி (e)**

இங்கு, **HL Hotels PLC** இனால் தாபிக்கப்பட வேண்டிய கட்டுப்பாட்டுச் சூழலின் மூலகங்கள் மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது. இந்தப் பகுதிக்காகப் புள்ளிகளைப் பெறுவதற்கு, பரீட்சார்த்திகள் சம்பந்தப்பட்ட பாட விடயங்களில் தெளிவான விளக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும். கட்டுப்பாட்டுச் சூழலின் மூலகங்கள் மற்றும் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் பற்றிய அறிவின்மை காரணமாக இப்பகுதிக்கான செயலாற்றுகை மோசமாகக் காணப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சம்பந்தமற்ற விடைகளை எழுதியிருந்தனர்.

**பகுதி (f)**

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு விடையளித்திருந்தனர். தரவுக்கோப்புகளுக்கு அதிகாரமளிக்கப் படாத திருத்தங்களைத் தடுப்பதற்கு செய்யப்படவேண்டிய பொதுக் கட்டுப்பாடுகளை நிரற்படுத்துவதற்கு பரீட்சார்த்திகளால் முடிந்திருந்தது. சராசரி எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளால் உள்ளீடுகளின் துல்லியத்தன்மைமீது கிடைக்கக்கூடிய கட்டுப்பாடுகளுக்கான பிரயோகக் கட்டுப்பாடுகளை நிரற்படுத்துவதற்கு முடிந்திருந்தது.

தேவையான ஆற்றலைக் கொண்டிராத பரீட்சார்த்திகள், பொதுக் கட்டுப்பாடுகளுக்கும் பிரயோகக் கட்டுப்பாடு களுக்குமிடையிலான வேறுபாடுகளைக் கருத்திற் கொள்ளாது IT உடன் தொடர்புடைய ஏதாவது கட்டுப்பாடுகளைக் குறிப்பிட்டிருந்தனர்.

***வினாவின் இப்பகுதிக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.***

**வினா இல. 09**

**பகுதி (a)**

இங்கு, கணக்காய்வுக்கு முறையான திட்டமிடல் ஏன் தேவைப்படுகிறது என்பதற்கான நான்கு காரணங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித்திருந்ததுடன் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**பகுதி (b)**

இங்கு, **சிறினா பப்றிக்ஸ் PLC** தொடர்பில் விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு பயன்படுத்தக்கூடிய ஐந்து மூலங்களை நிரற்படுத்துமாறு கோரப்பட்டது.

செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது. ஆயினும் சொற்பளவிலான பரீட்சார்த்திகள் வினாவின் **பகுதி “C”** உடன் தொடர்புடைய விடயங்களை விடையாக வழங்கியிருந்தனர்.

சில பரீட்சார்த்திகளிடம் பாடம் தொடர்பான அறிவு இல்லாதிருந்தபோதிலும் அவர்கள் வினாவில் தரப்பட்ட மூலங்களை மீளவும் சமர்ப்பித்து நியாயமானளவு புள்ளிகளைப் பெற்றுக்கொண்டனர்.

வெற்றிகரமாக விடையளிக்கத் தவறிய அதிகளவான பரீட்சார்த்திகள், **சிறினா பப்றிக்ஸ் PLC** பற்றிய விளக்கத்தினைப் பெறுவதற்கு மூலங்களாகப் பயன்படுத்தக்கூடிய உதவி ஆவணங்கள் மற்றும் பேரேடுகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தனர்.

**<u>பகுதி (c)</u>**

வினாவின் இந்தப் பகுதியின் மூலம் **சிறினா பப்றிக்ஸ் PLC** இன் கணக்காய்வு நடைமுறைகளை ஆற்றும்போது கணக்காய்வாளர் விசேட கவனம் செலுத்த வேண்டிய ஆறு பகுதிகளை இனங்காணுமாறு தேவைப்படுத்தப் பட்டது.

இங்கு, பரீட்சகரால் மிகவும் அடிப்படையான அறிவும் வினாவில் தரப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பகுதிகளை வெறுமனே இனங்காண்பதும் எதிர்பார்க்கப்பட்டது. (கடன்பட்டோருடன் தொடர்புடைய பல பகுதிகள் காணப்படுகின்றன)

குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் வினாவைப் பிழையாக விளங்கியிருந்ததுடன் வியாபாரத்தின் பகுதிகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தனர், நிறுவனத்தின் தன்மை, தொழிற்றுறை, ஒழுங்குவிதிகளும் ஏனைய வெளிவாரிக் காரணிகளும், உள்ளகக் கட்டுப்பாடுகள், நோக்கங்களும் தந்திரோபாயங்களும் மற்றும் தொடர்புடைய வியாபார இடர்கள், கணக்கீட்டுக் கொள்கைகளின் தெரிவும் பிரயோகமும் போன்ற கணக்காய்வாளர் ஒருவர் விளங்கிக்கொள்ள வேண்டிய பகுதிகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தனர்.

**<u>பகுதி (d)</u>**

இங்கு, கடன்பட்டோர் மீதி தொடர்பான கணக்காய்வினை மேற்கொள்வதற்குத் தேவையான நான்கு கணக்காய்வு நடைமுறைகளை நிரற்படுத்துவதற்குத் தேவைப்படுத்தப்பட்டது. நடைமுறைப் பிரயோகத்துடன் சரியான பாட அறிவைக் கொண்டிருந்த வெற்றிகரமான பரீட்சார்த்திகள் திருப்திகரமான மட்டத்தில் புள்ளிகளைப் பெறக்கூடியதாக இருந்தது.

வெற்றிகரமாக விடையளிக்காத பரீட்சார்த்திகள் கடன்பட்டோருடன் தொடர்புபடுத்தாது விசாரணை, அவதானிப்பு மற்றும் பரிசீலனை போன்ற கணக்காய்வு நடைமுறைகளின் வகைகளை மாத்திரம் எழுதியிருந்தனர்.

வெற்றிகரமாக விடையளிக்காத சில பரீட்சார்த்திகள் வினாவைப் பிழையாக விளங்கியிருந்ததுடன் அவர்கள், வசூலிப்பதை ஊக்குவிப்பதற்காக கழிவுகளை வழங்குதல், கடன் காலப்பகுதியைக் குறைத்தல் மற்றும் ஏற்பாடுகளைச் செய்தல் போன்ற கடன்பட்டோர் முகாமையுடன் தொடர்புடைய கம்பனியினால் பின்பற்றக்கூடிய நடைமுறைகளை எழுதியிருந்தனர்.

**<u>பகுதி (e)</u>**

கணக்காய்வுச் சான்றைப் பெறுவதற்காக கணக்காய்வு நடைமுறைகளின் மூன்று வகைகளை விபரிக்குமாறு இங்கு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் இலகுவாகப் பெற்றிருந்தனர்.

சில பரீட்சார்த்திகள் அவதானிப்பு மற்றும் பரிசீலனையை விபரிக்கும்போது கஸ்டங்களை எதிர்நோக்கினர்.

சொற்பளவிலான பரீட்சார்த்திகள் பின்வரும் சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர்:

- கட்டுப்பாட்டுச் சோதனை / விபரமான சோதனை / தற்சார்புக் கணக்காய்வு நடைமுறைகள் (பரந்தளவிலான கணக்காய்வு நடைமுறைகள் ஆனால் வகைகள் அல்ல).
- எழுத்துமூலச் சான்று வாய்மொழிமூலச் சான்றைவிட மிகவும் நம்பகரமானது போன்றவை.

***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.***

\- - -

## பரீட்சையில் செயலாற்றுகையை மேம்படுத்தும் பொருட்டு பரீட்சார்த்திகளின் ஆற்றல்சார் மட்டத்தை உயர்த்துவதற்கான பரிந்துரைகள் :

(1) பரீட்சார்த்திகள் பாடப் புத்தகத்தைப் படித்து, அதன் உள்ளடக்கங்களைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

(2) இந்தப் பாடத்துடன் சம்பந்தப்பட்ட கட்டுரைகள், சஞ்சிகைகளை வாசிப்பதுடன் கணக்காய்வுடன் தொடர்புடைய வேறு விடயங்களையும் வாசித்தறிதல் வேண்டும்.

(3) பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொற்களின் வரைவிலக்கணங்களை விளங்கிக் கொள்வதுடன், வினாத்தாளின் இறுதியில் தரப்பட்டுள்ள செயல் வினைச் சொல் நிரலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பயிற்சி பெறவும்.

(4) கடந்த கால வினாத்தாள்களின் உள்ளடக்கங்களைக் கற்பதுடன், குறைந்தது கடந்த 2 – 3 ஆண்டுகளின் நடைபெற்ற பரீட்சைகளின் வினாத்தாள்களைச் செய்து பார்த்து வினாக்கள் அமைக்கப்பட்டுள்ள விதம் பற்றி விளங்கிக்கொள்ள முயற்சித்தல் வேண்டும்.

(5) பரீட்சார்த்திகள் வினாத்தாள்களில் தரப்பட்டுள்ள கோட்பாடுகள் மற்றும் பரீட்சையில் அதனைப் பிரயோகிப்பது பற்றிய பரீட்சகரின் எதிர்பார்ப்பு ஆகியவற்றுக்கிடையிலான தொடர்புடைமையை விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

(6) கடந்தகால வினாத்தாள்களில் பாடப் புத்தகத்திலுள்ள எந்தப் பகுதி பரீட்சிக்கப்பட்டுள்ளதோ அத்தகைய பகுதிகளை சிறு குறிப்புகளாக எழுதிக்கொண்டு படித்து விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

(7) பரீட்சார்த்திகள் வினாத்தாளுக்காக வழங்கப்பட்ட நேரத்தை அடிப்படையாகக் கொண்டு கடந்த கால வினாக்களுக்கு விடையளித்துப் பயிற்சி எடுத்தல் வேண்டும். இது பரீட்சையின்போது நேர முகாமைத்துவத்தை மேம்படுத்த உதவும்.

(8) பாடப் புத்தகத்தில் தரப்பட்ட ஒவ்வொரு பாட அத்தியாயத்திலிருந்தும் சிறு குறிப்புகளை எழுதிக் கொள்வதுடன் நேரம் கிடைக்கும் போதெல்லாம் பாடத்திட்டத்தின் உள்ளடக்கங்களை நினைவில் வைத்திருப்பதற்காக அவற்றைப் படிக்கவும்.

**(9)** பரீட்சார்த்திகள் விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுதல் வேண்டும்.

(10) பரீட்சார்த்திகள் வினாத்தாளுக்கு விடையளிப்பதற்கு முன், அதில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும்.

(11) பரீட்சார்த்திகள், வினாவை விளங்கிக்கொள்வதற்கும் வினாவில் கேட்கப்பட்டதற்கு பொருத்தமானதும் துல்லியமானதுமான விடைகளை வழங்குவதற்குமாக பரீட்சையின்போது தமது மனநிலையை தெளிவாகவும் சமநிலையாகவும் வைத்திருத்தல் வேண்டும்.

(12) பரீட்சார்த்திகள் வினாக்களுக்கு வழங்கப்பட்டுள்ள புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு அவ்வினாவுக்கு விடையளிப்பதற்கான நேரத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதுடன், வினாத்தாளில் தரப்பட்ட சகல வினாக்களுக்கும் விளைதிறனான வகையில் விடையளிப்பதற்கான இயலுமையுடன் இருக்க வேண்டும்.

(13) விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன், தேவைப்படுத்தப்பட்ட சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்பட்டுள்ளனவா, பொருத்தமானவாறு இலக்கமிடப்பட்டுள்ளனவா என்பதை இருமுறை பரீட்சித்துக் கொள்ளவும்.

- * * * -